11.06.2025

OS.No. 316/2019

வா.சா.1 திரு.செந்தில்குமார் , த/பெ. மாணிக்கம்

<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கை முதலில் தாக்கல் செய்தது எனது தகப்பனார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவையன் என்பவருடைய மனைவி தான் தாவா வழக்கின் 3ம் பிரதிவாதி A.சந்திரலேகா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நாச்சம்மாள் தாவா வழக்கின் 1ம் பிரதிவாதி அவையனின் அம்மா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவையனின் தந்தை பெயர் அவையன் என்றால் சரிதான். தாவா வழக்கில் சொல்லப்பட்ட சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் 181/12, 181/10, 181/8 ஆகிய சர்வே எண் சொத்துக்களுக்கு வழக்கு போடப்பட்டுள்ளது. என் தந்தை ஊருக்குள் வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல, தேங்காய் வியாபாரம் செய்து வந்தார். எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்கள் நிறைய உள்ளன என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு சொந்தமான பூர்வீக சொத்து தென்னந்தோப்பு உள்ளது என்றும் அதிலுள்ள தேங்காய்களை எடுத்து வியாபாரம் செய்வோம் என்றால் சரிதான். சர்வே எண் 179/12, 179/24 ஆகிய சொத்துக்களுக்கு எனது தந்தை பிரதிவாதிகளுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியபோது நான் இல்லை என்றால் சரியல்ல, உடன் இருந்தேன். மேற்படி கிரைய ஒப்பந்தத்தை பிறகு ரத்து செய்து விட்டோமா என்றால் பிரதிவாதி கேட்டதால் ரத்து செய்துவிட்டோம். எனது தந்தையிடம் 1ம் பிரதிவாதி பெற்றிருந்த கடனுக்காக மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் கடனுக்காக அல்ல, எனது தந்தையுடன் 1ம் பிரதிவாதி தேங்காய் வியாபாரம் செய்தார் அதில் ஏற்பட்ட நஷ்டத்தால் எனது அப்பாவிடம் 1ம் பிரதிவாதி கடன் பெற்றிருந்தார், அதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.8லட்சம் கொடுக்கப்பட்டது. மேற்படி பணத்தில் 1ம் பிரதிவாதி எவ்வளவு தொகையை திருப்பிக் கொடுத்தார் என்றால் பணம் திருப்பி கொடுக்கவில்லை, அதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி

கிரைய ஒப்பந்தம் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி தனக்கு நிறைய கடன் ஏற்பட்டது என்றும் அதற்காக கிரைய ஒப்பந்தத்தில் கண்ட சொத்தை தான் விற்றுக் கொள்வதாகவும், அதற்காக தனது மனைவி பெயரிலான சொத்தை மேற்படி கடனுக்காக கிரையம் பதிந்து கொடுப்பதாக சொல்லி கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மேற்படி கடனுக்காக சர்வே எண். 181/12, 181/10 மற்றும் 181/8 சொத்துக்களுக்கு கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 181/12, 181/10 மற்றும் 181/8 சொத்துக்களுக்கு ஆதியில் யார் உரிமையாளர் என்றோ, யாருடைய பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றோ தெரிந்துகொள்ள அதற்கான ஆவணங்கள் பார்த்தோமா என்றால் பார்த்தோம். மேற்படி சொத்துக்கள் ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதி பெயரிலான பத்திரத்தை தான் பார்த்தேன் என்றும், அதற்கு முந்தைய உரிமையாளர் யார் என்பதை குறித்த ஆவணங்கள் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான், அவர்களுக்குள் பிரித்துக்கொண்டதாக வாய்மொழியாக சொன்னார்கள். 1ம் பிரதிவாதி அவையனுடன் எத்தனை பேர் உடன் பிறந்தவர்கள் என்றால் அது பற்றி தெரியாது, 1ம் பிரதிவாதியுடன் கண்ணன் என்பவர் உடன் பிறந்த விபரம் தெரியும், அவருடைய தாய், தந்தையரை தெரியும். மேற்படி தாவா சொத்துக்கள் ஆதியில் அசனம் அம்மாள் மற்றும் ரஷ்யா பேகம் ஆகியோருக்கு பாத்தியம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அசனம் அம்மாள் மற்றும் ரஷ்யாபேகத்திடமிருந்து தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதி நாச்சம்மாள் 1992ம் வருடத்திலேயே கிரையம் பெற்றிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1992ம் வருடத்திலிருந்து 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை நாங்கள் கடனுக்காக கிரையம் பெறுவதற்கு முன் அனுபவித்து வந்தார் என்றால் அவர் சொத்தை அவர் அனுபவித்து வந்திருக்கலாம். 3ம் பிரதிவாதிக்கு யார் தானசெட்டில்மெண்ட் கொடுத்தது என்றால் 1ம் பிரதிவாதி கொடுத்தார். மேற்படி தானசெட்டில்மெண்ட் 1ம்

பிரதிவாதி தந்தை அவையனும், 2ம் பிரதிவாதி நாச்சம்மாளும், 1ம் பிரதிவாதியுடன் உடன் பிறந்தவர்களோ கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் பத்திரத்திரமும் செல்லாது என்பதால் அதன் அடிப்படையில் தாவாச் சொத்துக்களை சந்திரலேகாவிடமிருந்து எனது தகப்பனார் கிரையம் பெற்றதும் செல்லாது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் கண்ட 3 இலக்க சொத்துக்களும் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அவருடைய குடும்பத்திற்குள் பாகம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 2ம் பிரதிவாதியின் குடும்பத்தாருக்கிடையே தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் 1ம் பிரதிவாதி அவையன் தனிப்பட்ட முறையில் 3ம் பிரதிவாதிக்கு தானம் எழுதிக்கொடுக்க உரிமை கொண்டவர் அல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் எனது தகப்பனார் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்திருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 2ம் பிரதிவாதியும் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாக சொல்லி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கு நடவடிக்கைகள் முழுவதையும் நான் கவனித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் 2ம் பிரதிவாதியும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றும் அதை தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி இருவர் தாக்கல் செய்த மனுக்களில் எனது தந்தை தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனு அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த விபரம் எனக்கு தெரிந்தும் அதனை ஒத்துக்கொண்டால் வழக்கிற்கு விரோதமாக முடியும் என்பதால் தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் 2ம் பிரதிவாதியும், அவருடைய கணவர் அவையனும் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் 2015ம் வருடம் கிரையம் வாங்கியதற்கு பின்பிலிருந்து அவர்கள் இருந்து வருகிறார்கள் (சாட்சி தற்போது

2019 வழக்கிற்கு பிறகு அவர்கள் அனுபவத்தில் இருப்பதாக சொல்கிறார்). 1992ம் வருடம் முதல் 2ம் பிரதிவாதியும், அவரது கணவரும் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி 1992ம் வருடம் கிரையம் பெற்றதிலிருந்து 1ம் பிரதிவாதியோ, 3ம் பிரதிவாதியோ அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் கிரையம் பெற்றதற்கு பிறகு நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நாங்கள் மேற்கொண்ட கிரையமானது கடனுக்காக ஏற்பட்டது என்றும், சொத்தின் உடைமையை நாங்கள் எடுத்திடவில்லை என்றும் எனது நிருபணவாக்குமூலத்தில் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எங்களது பெயரில் வரி ரசீது உள்ளது என நான் சொல்வது கடனுக்காக கிரையம் பெறப்பட்டது என்ற சங்கதியை மறைத்து உண்மையில் கிரையம் பெற்றதாக சொல்லி பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவை சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் நாங்கள் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய நடவடிக்கையில் சட்டப்படியான மறுபயன் எதுவும் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் எனது தகப்பனார் ரூ.3 லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றும் அதனை வட்டியுடன் ரூ.6,75,000/-மாக திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா 1ம் பிரதிவாதியிடம் கூடுதலாக பணம் கேட்டார் என்றும், 1ம் பிரதிவாதியும் ரூ.3,69,000/- வரை கொடுத்து பத்திரத்தை ரத்து செய்ய தயாராக இருந்தார் என்றும் சொத்தின் மதிப்பு கூடுதலாக இருந்த காரணத்தால் நாங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளாமல் தாவா வழக்கை சொத்தை அபகரிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதனால் தாவா சொத்து குறித்து எங்களிடம் உள்ள ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. 2ம் பிரரதிவாதி தாவா சொத்து தனக்கு பாத்தியமென எதிர்கோருரிமை பரிகாரம் கேட்டுள்ளார் அதனால் 2ம் பிரதிவாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது

என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கூடுதல் தொகையை கொடுத்திட தயாராக இருக்கிறார் என்றும் அதை நாங்கள் பெற்றுக்கொண்டு கிரையபத்திரத்தை ரத்து செய்வது எங்களது கடமை என்றால் சரியல்ல.

**1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தனர்.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.06.11 15:52:34 +0530